# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | செப்டம்பர் 1992 | இதழ் 9



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.**

ஈரோட்டில் நீங்கள் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. கிறிஸ்துவின் சபை என்றால் என்ன? 1 - 12

2. நாம் கனி கொடாத அத்தி மரங்களா? 13 - 16

3. நான் பிரமிப்பு அடைகிறேன். 17 - 20

4. நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாக இருந்தால் 21-25

5. திருமணம் 26 - 28

THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ

Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 5. September—1992 Issue 9

**ஆசிரியவுரை**

# கிறிஸ்துவின் சபை என்றால் என்ன?

நமது நண்பர்கள் நம்மிடத்தில் அடிக்கடி புதிய ஏற்பாட்டுச் சபை என்றால் என்ன? அது மற்ற சபைகளைக் காட்டிலும் வேறுபட்டதா? அதற்கு ஒரு விசுவாசப் பிரமாணம் உண்டா? அது எவற்றை விசுவாசிக்கிறது என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள். அவர்கள் ஆர்வத்தை மெச்சுகிறோம். அவர்களுக்குப் பயன் தரும் வகையில் சில விளக்கங்களைக் கொடுத்து இருக்கிறோம். தயவு செய்து வாசித்து சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

கிறிஸ்துவின் சபை புதிய ஏற்பாட்டு சபையாகும். சபைஎன்றால் என்ன என்றும், கிறிஸ்தவர்கள் என்ன போதிக்க வேண்டும் என்றும் சொல்லுவதற்கு கிறிஸ்துவிற்கு மட்டுமே புதிய ஏற்பாட்டில் அதிகாரம் உண்டு.

கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் மக்களனைவருடைய கருத்தும் அதுதான், ஸ்தாபன அமைப்பு, பெயர், ஆராதனை, மனம் மாறி குணப்படுதற்கான விதிமுறைகள், கிறிஸ்துவ ஜீவியத்தின் தத்துவங்கள் ஆகியவற்றிலும் புதிய ஏற்பாட்டில் சபை எந்த மாதிரி இருந்ததோ அதே மாதிரிதான் இன்றிருக்கிற சபையும் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

அங்கத்தினர்கள் தங்களுடைய பலவீனங்களையும் குறைகளையும் அறிந்திருக்கின்றனர். அதே சமயத்தில் தேவன் சபைக்காக வைத்திருக்கும் சகல நிறைவுகளையும் பரிபூரணத் திட்டத்தையும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். அனைத்து மக்களும் நன்கு

படித்து புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தை மீட்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் மக்களனைவரோடும் மன்றாடுகின்றனர்.

கிறிஸ்துவ மார்க்கத்தின் முழு அமைப்பும் கிறிஸ்துவின் தெய்வீகம், அவரது உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் விசுவாசிக்கின்றனர். (1 கொரி.15:1-4) ஏனென்றால் அவர்கள் எல்லாவற்றிலும் புதிய ஏற்பாட்டையே பின்பற்ற முயற்சிக்கிறார்கள். இயேசு தேவனுடைய தெய்வீகக் குமாரன். கன்னிகையினிடத்தில் பிறந்தார். பூமியிலிருந்த போது அற்புதங்களைச் செய்வதற்கு தேவனுடைய வல்லமை பெற்றிருந்தார், அவருடைய வாழ்க்கையும், மரணமும் பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றியது. சிலுவையில் கொல்லப்பட்டார்.. தேவனுடைய வல்லமையால் மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டு ராஜாவாக உயர்த்தப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்றெல்லாம் அவர்கள் இயேசுவை மதிக்கின்றனர்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் தேவ ஆவியினால் ஏவப்பட்டவர்கள் என்றும், ஆதலால் புதிய ஏற்பாடு சத்தியம் என்றும், அது தேவனிடமிருந்து மனிதனுக்கு கிடைத்த முழுமையான, இறுதியான வெளிப்பாடு என்றும் சபையினர் விசுவாசிக்கின்றனர். (யோ.16:13, 2 தீமோ.3:16, 17, யூதா 3).

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், பழைய ஏற்பாடும் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்றும், அது தேவனுடைய நித்திய திட்டத்தின் ஒரு பகுதி என்றும் கிறிஸ்துவுக்குள் நம்மை நடத்துவதற்கு உபாத்தியாயிருக்கிறது அல்லது ஆயத்தப் படுத்துவதாயிருக்கிறது என்றும் விசுவாசிக்கின்றனர். (கலா.3:24).

பழைய ஏற்பாடு (பழைய பிரமாணம்) நடுவிலிராதபடி எடுத்து போடப்பட்டு சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டது என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது [கொலோ 2:14], பழையபிரமாணம் ஒழிந்த பின்பு, புதியதும், மேன்மையானதுமான உடன்படிக்கை அமுலுக்கு வந்தது [எபி 8: 6-7, 9: 15- 18]

புதிய ஏற்பாட்டை விசுவாசப் பிரமாணமாகவும். நடைமுறையாகவும் பழைய ஏற்பாட்டை மாதிரியாகவும் பின்பற்றுகின்ற கிறிஸ்துவின் சபையார், வேதம் பேசுகின்ற இடத்தில் தாங்களும் பேசுகின்றனர், வேதம் அமைதியாயிருக்கின்ற இடத்தில் தாங்களும் அமைதியாயிருக்கின்றனர். கிறிஸ்துவைப் பின்-

பற்றுவதற்கு இதுவே தர்க்கரீதியாக பாதுகாப்பான, வேதமுறை அல்லது வழி என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

## புதிய ஏற்பாட்டிற்குக் கீழ்படியுங்கள்

புதிய ஏற்பாட்டில் இல்லாத ஒரு கொள்கையை உட்புகுத்துவதோ, புதிய ஏற்பாட்டிலுள்ள எந்த கட்டளைக்காவது கீழ்ப்படிய மறுப்பதோ, அல்லது புதிய ஏற்பாட்டில் இல்லாத எந்த வழக்கத்தையாவது கடைப்பிடிப்பதோ என்பது தேவனுடைய போதனைகளோடு கூட்டுவதும் அல்லது குறைப்பதுமே யாகும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

தேவன் சகல அதிகாரத்தையும் கிறிஸ்துவிற்கு கொடுத்திருக்கிறார் என்றும் அந்த கிறிஸ்துதான் இன்று தேவனுடைய பேச்சாளராக இருக்கிறார் என்றும் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. [மத் 28:18, எபி 1:1-2] கிறிஸ்து தனது சீடர்களுக்கு கொடுத்திருக்கும் கட்டளைகளைப் புதிய ஏற்பாடு மட்டுமே அறிவிப்பதால் கிறிஸ்தவ மார்க்க உபதேசத்திற்கும், நடைமுறைக்கும் புதிய ஏற்பாடு மட்டுமே அடிப்படையாய் இயங்க முடியும்.

இதுதான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களுக்கு அடிப்படையாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டை எவ்விதத்திலும் மாற்றாமல் போதிப்பதன் மூலம் மனிதர்கள் கிறிஸ்தவர்களாக வழி காட்ட ஒரே வழி என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்பது பொருத்தமானது என்று நம்புகின்றனர்.

ஏன் கிறிஸ்துவுக்கு மட்டும் கீழ்ப்படிந்து ஒரு கிறிஸ்தவனாக மட்டும் மாறி தொடர்ந்து கிறிஸ்தவனாக மட்டும் இருக்கக் கூடாது?

ஏன் புதிய ஏற்பாட்டில் இல்லாத ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்?

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் நிலையை விளக்குவதற்கு ஒரு சரித்திரக் கண்ணோட்டம் உதவியாக இருக்கும். கீழே வாசியுங்கள்.

வேதத்தில் பல முறை ராஜ்யம் என்று சொல்லப்பட்டுள்ள சபையின் ஸ்தாபிதம் தீர்க்கதரிசிகளாலும் யோவான் ஸ்நானகனாலும் முன்னுரைக்கப்பட்டது. இயேசு இப்பூமியிலிருந்த போது தன்னுடைய சபையை கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். [மத். 16 : 18]

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு வந்த முதல் பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகையானது சபையின் ஸ்தாபிதத்தை அடையாளப்படுத்தியது என்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு விசுவாசிக்கின்றனர்.

அந்த நாளுக்கு முன்பு சபையின் ஸ்தாபிதம் ஒரு எதிர்கால சம்பவமாகவே வசனங்களில் சொல்லப்பட்டு வந்தது. பெந்தேகொஸ்தே நாளுக்குப் பின்பு சபை ஏற்பட்டுவிட்ட ஸ்தாபனமாகவே வசனங்களில் சொல்லப்படுகிறது.

## அப்போஸ்தலர்களுடைய உபதேசம்

கர்தருடைய சபையின் முதல் அங்கத்தினர்கள் அதாவது எருசலேமிலுள்ள பிராந்திய சபை அங்கத்தினர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தை தவறற்ற உபதேசம் என்றும், அதுவே இறுதியானது என்றும் ஏற்றுக் கொண்டனர். ''அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்''. (அப். 2:42).

காலம் கடந்து செல்லச் செல்ல பல கிறிஸ்தவர்களுடைய வாஞ்சையும், உறுதியும் தளர்ந்து போயிற்று. அவர்களை உற்சாகப் படுத்துவதற்காக ஒரு சிலர், அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திற்கு மாறுபாடானவைகளை போதிக்கவும் கடைப்பிடிக்கவும் தொடங்கினார்கள்.

ஆரோக்கியமான உபதேசத்தை விட்டு மக்கள் இப்படி விலகிப் போவார்களென்று, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தனர். கீழ்க்கண்ட வசனங்களைக் கவனிக்கவும். ''நான் (அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார்) போன பின்பு மந்தையைத் தப்பிவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும், உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்''. (அப்-28:29-30).

''.... எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களால் கற்றுக் கொள்ளவும் ....'' (1 கொ.4:6)

இவ்வளவு கட்டளைகள் இருந்த போதிலும், இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, இடைக்காலங்கள் மறுமலர்ச்சிக் காலங்கள் வரை, சபையின் ஸ்தாபன அமைப்பு ஆராதனை, உபதேசம் ஆகியவைகள் புதிய ஏற்பாட்டு சபையிலிருந்து முற்றிலும்

மாறுபடும் அளவிற்கு சத்தியத்தை விட்டு விலகும் நிகழ்ச்சி ஒன்றன் பின் ஒன்றாக நடந்து கொண்டே வந்தது.

சபையில் புகுத்தப்பட்ட புதுமைகளை வரலாறு ஆதாரப் பூர்வமாய் அறிவிக்கிறது.

1. வசனம் அங்கீகரிக்காத சபை உத்தியோகங்கள்.
2. விசேஷித்த குருமார்கள் நியமனம் செய்யப்படுதல்.
3. சபை அமைப்பு, ஆராதனை, உபதேசம் ஆகியவற்றை தீர்மானிப்பதற்கு மத ஆலோசனை சங்கங்கள்.
4. முழுக்கு, அகற்றப்பட்டு தெளிப்பு நடைமுறைக்கு வருதலும் குழந்தைகள் தெளிப்பை பெறுதலும்.
5. ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுதல்.

இடைக்காலத்தின் இறுதியில் ரோம சபையின் நடைமுறையையும், குருமார்களின் ஆதிக்கத்தையும் எதிர்த்து சில விடுதலை விரும்பிகள் கலகம் செய்தனர். மதத்திற்குரிய காரியங்களில் வேதாகமத்திற்கு மட்டுமே முழு அதிகாரம் உண்டு என்று வாதிட்டனர். இவர்களில் மார்ட்டின் லூதர், ஜான் கால்வின், அல்ரிச் ஸ்விங்லி ஆகியோார் சிறப்பானவர்கள், இந்தத் தலைவர்களை பலர் பின்பற்றினார்கள். இறுதியில் இவர்களது உபதேசம் துரதிஷ்டவசமாய் பல்வேறு கொள்கைளாய் உருவெடுத்தது.

### வேதத்தை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்

மேற்கண்ட காரணங்களால் பல பிரிவு-சபைகள் எல்லா இடங்களிலும் தோன்றின. ஒவ்வொரு கட்டமும் வினோதமான பெயரும், ஸ்தாபன அமைப்பும், போதனையும் நடைமுறையும் உடையதாய் இருந்தன.

கி.பி. 1700ம் ஆண்டின் இறுதியில் உலகின் பல்வேறு பகுதியிலுள்ள பல்வேறு பிரிவு சபைகளைச் சேர்ந்த மக்கள் தனித்தனியாய் வேதத்தைப் படித்து கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர்.

நாம் ஏன் பல்வேறு பிரிவு சபையையும் ரோமன் கத்தோலிக்க சபையையும் கடந்து எளிமையும், தூய்மையும் நிறைந்த முதல் நூற்றாண்டு சபைக்கு செல்லக்கூடாது?

நாம் ஏன் மீண்டும் வேதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருக்கக் கூடாது?

அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களும் விதைத்த அதே விதையை [லூக்கா 8: 11] நாமும் விதைத்து அவர்களைப் போல நாமும் ஏன் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கக்கூடாது என்று அவர்களை வினவினார்கள்.

இவர்கள் மற்றனைவரையும் சந்தித்து, பிரிவு சபைகளையும் மனிதக் கொள்கைகளையும் உதறித் தள்ளி விட்டு வேதத்தை மட்டும் பின்பற்றும்படி அவர்களிடம் மன்றாடினர்.

இவர்கள் 'புதிய ஏற்பாட்டு' உபதேசத்தை மட்டும் உயர்த்த வேண்டுமேயொழிய இந்த மனிதர்களை அல்ல என்று தொடர்ந்து போதித்தார்கள்.

விசுவாசத்திற்குரிய செய்கைகளைப் பொறுத்த வரையில் வேதத்தில் ஆதாரப்பூர்வமாய் சொல்லப்பட்டவைகளைத் தவிர வேறு எதுவும் மக்களிடம் எதிர்பார்க்கப்படுவதில்லை என்றும் அவர்கள் போதித்தார்கள்.

வேதாகமத்திற்கு திரும்ப செல்வது என்பது மற்றொரு பிரிவு சபையை ஆரம்பிப்பது அல்ல; ஆனால் ஆதி சபைக்கு திரும்புவது என்பதை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இம்மக்கள் பிராந்திய சபை அடிப்படையில் சபை ஆட்சி-யை அமைத்தனர்.

இவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தரு-டைய பந்தியில் பங்கு பெற்றனர். இவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் பாட்டுப் பாடுகின்றனர்.

மனம் மாறி குணப்படுவதற்கு, விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் ஞானஸ்நானம் ஆகியவை அவசியம் என்று அவர்கள் பிரசங்கிக்கின்றனர்.

சபையின் தலையாய நோக்கம் சுவிஷேத்தை அறிவிப்பது என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர். அதாவது சர்வ சிருஷ்டிக்-கும் சுவிஷேத்தைப் பிரசங்கிப்பதும், ஏழைகட்கு உதவுவதும், அனைத்து மக்களுக்கும் நன்மை செய்வதுமே சபையின் பணி என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

அவர்கள் எந்தப் பிரிவு—சபையின் பெயரையும் தரித்துக் கொள்ளாமல் கிறிஸ்துவின் சபையார் என்று தங்களை அழைத்துக் கொள்வது மட்டுமே புதிய ஏற்பாட்டு மாதிரியை உறுதிபடுத்த முடியும் என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

அவர்கள் தங்களை கத்தோலிக்கர்கள் என்றோ அல்லது ப்ராட்டஸ்டண்டுகள் என்றோ அழைப்பதில்லை, ஏனென்றால்

கத்தோலிக்க இயக்கமோ அல்லது ப்ராட்டஸ்டண்டுகள் இயக்கமோ முதல் நூற்றாண்டில் இருக்கவில்லை என்றும் இவை இரண்டுமே புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்படவில்லை என்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

மற்றொரு உண்மை என்னவென்றால், கடந்த ஐம்பது ஆண்டுகளாக உலகில் பல நாடுகளிலுள்ள பல பிரிவு சபைகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவிலுள்ள கிறிஸ்துவின் சபைகளைக் குறித்து எவ்வகையிலும் கேள்விப்படாமல் தாங்களே வேதத்தை நன்கு படித்ததன் விளைவாக தாங்கள் அங்கம் வகித்த பிரிவு சபைகளை விட்டு விலகி அமெரிக்காவிலுள்ள கிறிஸ்துவின் சபையாரைப் போலவே தாங்களும் ஆராதனை செய்து போதித்து வருகிறார்கள் என்பதே.

இதற்கு ஒரு உதாரணம் அஸ்ஸாமிலுள்ள ஒரு கூட்டத்தாரும் நைஜீரியாவிலுள்ள மற்றொரு கூட்டமும் மத்திய ஐரோப்பாவில் இப்படி பல கூட்டங்களும் காணப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்னும் வேண்டுகோளில் விருப்பமாயிருக்கிற மக்களை கிறிஸ்துவின் சபையார் எல்லா இடங்களிலும் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது பெரிய அளவில் திட்டமிட்டு போதித்து, மக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பிராந்திய சபைகளை ஸ்தாபித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு பிராந்திய சபையும் பிராந்திய அளவில் இயக்கப்படுகிறது. சபை அங்கத்தினர்கள் வேதாகமத்தை தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட வசனம் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். இயேசு தேவனுடைய தெய்வீகக் குமாரன் என்றும் அவர்தான் சபைக்குத் தலைவர் என்றும் அவர் புதிய ஏற்பாட்டின் மூலம் தன்னை பின்பற்றுகிறவர்களோடு பேசுகிறார் என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

ஆவிக்குரிய உபதேசம் அல்லது ஆவிக்குரிய நடைமுறையைப் பற்றிய கேள்விகளுக்கு சபை அங்கத்தினர்கள் பதிலளிக்கையில் ''புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?'' என்ற கேள்வியைக் கேட்கிறார்கள்.

உதாரணமாக, சபையின் ஸ்தாபன அமைப்பைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?

புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஒரே ஸ்தாபன அமைப்பு அல்லது சபை அரசாங்கம், மூப்பர்கள், கண்காணிகள் அல்லது மேய்ப்பர்களால் (இந்த மூன்று வார்த்தைகளும் ஒரே வேலையைக்

குறிப்பவை. ஒரே பொருளில் மாறிமாறி பயன்படுத்தப்பட்டுள்ளன) நடத்தப்படும் பிராந்திய சபையேயாகும். இந்த மனிதர்கள் எப்பொழுதும் பன்மையிலேயே அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஒரு பிராந்திய சபையைமட்டும் மேற்பார்வை செய்பவர்கள் (அப் 20:28) சபையில் மூப்பர்களோடும், மூப்பர்களுக்குக் கட்டுப்பட்டும் சபையில் வேலை செய்கிற சில விசேஷித்த வேலைக்காரர்களே சபையின் உதவிக்காரர்கள் எனப்படுவர். ஒரு அதிகாரி, ஒரு சபையையே அல்லாமல் பல பிராந்திய சபைகளை மேற்பார்வை செய்வது புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் காணப்படாத ஒரு எடுத்துக்காட்டாகும். பல அதிகாரிகளடங்கிய குழு ஒன்று பல பிராந்திய சபைகளை மேற்பார்வை செய்வதும் புதிய ஏற்பாட்டில் காணப்படாத ஒன்றே.

ஆகையால் சபை அங்கத்தினர்கள், மாசற்ற பிராந்திய சபையின் முறைதான் வேதவசனப்படி சபையின் ஸ்தாபனஅமைப்புமுறை என்னும் கருத்தை உடையவர்களாயிருக்கின்றனர். இது ஒரு தத்துவமேயன்றி, வசதிக்கேற்ப அமைப்பை மாற்றிக் கொள்ள அனுமதியோ அல்லது மத சுதந்திரமோ அல்ல.

சபையின் பெயரைப்பற்றியும் அதன் அங்கத்தினர்களைப் பற்றியும் புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறது?

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (அப் 11:26;1 பேதுரு 4;16) மொத்தத்தில் அவர்கள் 'சபை' என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் கூட்டம் அந்த இடத்திலுள்ள 'சபை' என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக அந்தியோகியாவிலுள்ள சபை, ரோமாபுரியிலுள்ள சபை அல்லது ஆசியாவிலுள்ள ஏழு சபைகள் ஆகிய இவைகளைக் குறிப்பிடலாம் ஆகையால் இன்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள உதாரணமாக ஈரோடு என்னுமிடத்திலுள்ள சபையை ஈரோடு கிறிஸ்துவின் சபை என்றும் காங்கயத்தில் இருக்கும் சபையை காங்கயம் கிறிஸ்துவின் சபை என்றும் அழைக்கின்றனர்.

அல்லது அவர்கள் எந்த இடத்தில் வசிக்கிறார்களோ அந்த இடத்திலுள்ள சபையில் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள் என்று நாம் பொருள் கொள்ளவேண்டும். இதர கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருப்பதால் அவர்களை சகோதரர்கள் என்று அவர்கள் அழைக்கிறார்கள். (ரோமர் 12:5;1 கொரி 12;12)

கிறிஸ்தவர்களனைவரையும் மொத்தத்தில் பொதுவாக 'சபை' என்று சொல்லுகிறோம்.

## பிரிவு சபைக் கூட்டத்தாரின் தவறுகள்

சபையை அதாவது அனைத்துக் கிறிஸ்தவர்களின் பொதுக் குழுவை ''கிறிஸ்துவின் சபையார்'' (ரோமர் 16:16) என்றும் தேவனுடைய சபை (1 கொ. 1:2) என்றும், கர்த்தருடைய சபை (அப். 20;28) என்றும் புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது.

சபையைக் குறிப்பிடும் வேறு பல விளக்க சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன, ஆனால் பிரிவு-சபைகளின் பெயர்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. அவைகளை பயன்படுத்துவது தவறு என்று கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் விசுவாசிக்கின்றனர். (1 கொ. 1:10-13).

ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனையைக் குறித்து புதிய- ஏற்பாடு என்ன போதிக்கிறது என்பதில் கிறிஸ்துவின் சபையார் அக்கறையுள்ளவர்களாயிருக்கின்றனர்.

1) அவர்கள் பொது ஆராதனையில் ஜெபிக்கிறார்கள் — ஏனெனில் அப்படி ஜெபிக்கும்படி புதிய ஏற்பாடு போதிக்கிறது.

2) அவர்கள் சபைப் பொதுக் கூட்டங்களில் போதிக்கிறார்கள். ஏனென்றால் புதிய ஏற்பாடு இப்படிப்பட்ட மாதிரிகளைக் குறிப்பிடுகிறது.

3) அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தங்கள் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையை வேதம் கர்த்தருடைய நாள் என்றும், வாரத்தின் முதல் நாள் என்றும் குறிப்பிடுகிறது. ''அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்'' (1 கொ. 16:2) என்னும் வசனத்தை அவர்கள் பின்பற்றுகிறார்கள்.

4) அவர்கள் ஆராதனையில் பாட்டு பாடுகிறார்கள். ஆனால் அவர்கள் கருவி இசையைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் அதைக் குறித்து மாதிரிகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதுமில்லை என்று அவர்கள் விசுவாசிப்பதால் கருவி இசையைப் பயன்படுத்துவது தேவனுடைய பிரமாணத்தை மீறுவதாகும் என்று நம்புகிறார்கள். ''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்ல வேண்டும் (கொலோ. 3:16) என்பதையும், அப்படிச் செய்யும்போது, ''இருதயத்தில் கர்த்தரைப்பாடி கீர்த்தனம் பண்ணவேண்டும்'' (எபே. 5:19) என்பதையும் அவர்கள் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறார்கள்.

5) அவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் ஒன்று கூடி அப்பம் பிட்கிறார்கள் அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறு-கிறார்கள். ஏனெனில் அப்படி செய்வதுதான் புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பின்பற்றுவதாகும் (அப் 20:7) அவர்கள் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூறுவதற்காக கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறார்கள் (லூக்கா 22:19 1. கொ. 11:26) அப்பம் இயேசு-வின் சரீரத்தையும், ரசம் அவரது இரத்தத்தையும் நினைவுபடுத்து கிறது என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். (மத். 26:26-29).

## முழுக்கின் மூலம் 'திரு முழுக்கை' (ஞானஸ்நானம்) பெறுதல்

மனம்மாறி குணப்படுவதைக் குறித்து அல்லது இரட்சிக்கப்படு-வதைக் குறித்து கிறிஸ்துவின் சபையார் என்ன போதிக்கிறார்கள்?

1) இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்தல் (எபி.11:6) தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் வரும் விசு-வாசமே (ரோமர் 10:17). மனம் திரும்புவதற்கு வழி நடத்தும் விசுவாசம்.

2) மனதிரும்புதலும் அப்படியே கட்டளையாகக் கொடுக்-கப்பட்டுள்ளது. (அப் 2:38;17:30).

3) அறிக்கையிடுதல் - மனந்திரும்பிய ஒரு விசுவாசி கிறிஸ்-துவில் தனக்குள்ள விசுவாசத்தை பகிரங்கமாய் வெளியில் சொல்-லுவது (1 தீமோ 6.12' ரோமர் 10:9-10).

4) ஞானஸ்நானம் - கீழ்ப்படிய வேண்டிய மேற்சொன்ன காரியங்களோடு ஞானஸ்நானம் பாவ மன்னிப்பிற்கென்று கொடுக்-கப்படுகிறது. (அப். 2:38) ஞானஸ்நானம் தான் ஒருவனை கிறிஸ்து வின் சரீரமாகிய சபையில் சேர்க்கிறது (1. கொ. 12:13).

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் ஒரே ஞானஸ்நானத்தைக் குறித்துப் போதிக்கின்றனர். (எபே. 4:5) அது 'முழுக்கு' என்பதே, இதன் மூலவார்த்தைக்கு முழுக்கு என்றுதான் பொருள்.

புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தை, ''அடக்கம் பண்ணப்படு-தல்'' என்று குறிப்பிடுகின்றது. (ரோமர் 6:4, கொலோ. 2:12).

கிறிஸ்துவின் சபையார் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. ஏனெனில் குழந்தைகள் விசுவாசிக்கவோ, மனந்-திரும்பவோ, விசுவாசத்தை அறிக்கையிடவோ இயலாதவர்கள். ஆகையால் குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கு தகுதியான-வர்கள் அல்ல என்று கிறிஸ்துவின் சபையார் விசுவாசிக்கிறார்கள்.

இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையால் வரும் இலவச ஈவு என்றும் அது மனிதனுடைய கிரியைகளினாலே சம்பாதிப்பதல்ல

என்றும் புதிய ஏற்பாடு போதிக்கிறது என்று சபை அங்கத்தினர்கள் விசுவாசிக்கிறார்கள் (எபே. 2;8-9) இருப்பினும் இந்த இலவச ஈவு ஒருவனை கீழ்படிதலுக்குள் வழி நடத்துகின்ற ஜீவனுள்ள செயல்படும் விசுவாசத்தினால் வருகிறது என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். அவர்கள் தங்களது தகுதியை நம்பாமல் தங்களை பாவத்திலிருந்து சுத்திகரித்துக் கொள்ள இயேசுவின் இரத்தத்தையே நம்பி இருக்கிறார்கள். [1 யோ. 1:7]

## மதப்பட்டங்களில்லை

நித்திய மகிழ்ச்சிக்குரிய இடம் பரலோகம் என்றும் நித்திய தண்டனைக்குரிய இடம் நரகம் என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். காரணம், இதுவும் கிறிஸ்துவின் போதனையே [மத். 25: 31-46]

கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் மறைதிரு (ரெவரெண்டு) போன்ற மதப்பட்டங்களை தரித்துக் கொள்ளுவதில்லை இப்படிபட்ட பட்டங்கள் புதிய ஏற்பாட்டின் உபதேசத்திற்கும், தன்மைக்கும் மாறுபட்டது என்றும், ஒரு ஊழியரின் ஊழியத்திற்கும், பொறுப்புகளுக்கும் கூட இது மாறுபட்டது என்றும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். குருக்கள் என்று அழைக்கப்படுகிறவர்களுக்கும் பாமர மக்களுக்குமிடையே புதிய ஏற்பாடு எந்த வேறுபாட்டையும் கூறுவதில்லை என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர். அதோடு ''பாஸ்டர்'' என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் ஒரு மூப்பருடைய அல்லது கண்காணியினுடைய பணியைக் குறிக்கிறதேயன்றி ஒரு சுவிசேஷகனுடைய அல்லது பிரசங்கியின் பணியைக் குறிப்பது அல்ல என்பதையும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களனைவரும் தங்களுடைய தினசரி நடத்தையைப் புதிய ஏற்பாட்டின் தரத்திற்கு சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் போதிக்கிறார்கள். அடிப்படைக் கருத்துக்களாகிய உண்மை, நியாயம் உழைப்பு ஆகியவைகளே கிறிஸ்தவர்களை அவர்களது அனைத்து உறவு முறைகளிலும் வழி நடத்த வேண்டும்; ஏனென்றால் இத்தத்துவங்கள் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

அதோடு விவாகம், விவாகரத்து ஆகியவைகளைப் பற்றியும் கிறிஸ்துவின் பிரமாணம் கடைபிடிக்கப்பட வேண்டும். விவாகரத்து செய்யப்படுவதற்கும், மறுமணம் செய்து கொள்வதற்கும் ஒரே ஒரு அடிப்படை மட்டும் உண்டு. இருவரில் ஒருவர் வேசித்தனம்

என்றும் குற்றம் புரிவதேயாகும் [மத். 19:9] கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் இதை கிறிஸ்துவின் பிரமாணம் என்று போதிக்கிறார்களேயொழிய சபையின் சட்டம் என்று போதிப்பதில்லை.

கிறிஸ்தவர்கள், இவ்வாறு அமைக்கப்பட்ட சபை அரசாட்சியின் நற்குடி மக்களாய் விளங்கவேண்டும் என்றும் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. [ரோமர் 13: 1-7]

ஆகையால் முதல் நூற்றாண்டில் சபையார் பின்பற்றிய அதே உபதேசத்தை இருபதாவது நூற்றாண்டிலுள்ள கிறிஸ்துவின் சபையாரும் வழிகாட்டியாக வைத்துள்ளனர்.

புதிய ஏற்பாட்டை எல்லாக் காரியங்களிலும் கடைபிடிக்கவும், இயேசு கிறிஸ்து மரித்து ஸ்தாபித்த சபையில் இணைந்து கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்க அனைவரையும் கிறிஸ்துவின் சபையினர் தாழ்மையோடும் அன்போடும் அழைக்கின்றனர்.

ஈ. இசட். செல்வநாயகம்

---

மானிடனே, நீ வெறும் கருவி. தான்; இயக்குநர் இறைவனே. ஆகையால் பெருமை பேசுவதை விடு, தேவனுக்கு நன்றி செலுத்து.

......என் பெலத்தினாலும், என் ஞானத்தினாலும் இதைச் செய்தேன்; நான் புத்திமான். நான் ஜனங்களின் எல்லைகளைமாற்றி அவர்கள் பண்டகச் சாலைகளைக் கொள்ளையிட்டு வல்லவனைப் போல் குடிகளைத் தாழ்த்தினேன்.

ஒரு குருவிக் கூட்டைக் கண்டுபிடிப்பது போல என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டு பிடித்தது விட்டு விடப்பட்ட முட்டைகளை வாரிக் கொள்வது போல் பூமியையெல்லாம் நான்வாரிக் கொண்டேன். ஒருவரும் செட்டையை அசைத்ததுமில்லை; ''கீச்'' என்று சத்தமிட்டதுமில்லை. என்று உன் சாமர்த்தியத்தையும் புத்திசாலித் தனத்தையும் பற்றி பெருமை பேசுகிற மனிதனே,

கோடாரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ? வாளானது தன்னைக் கையாடுகிறவனுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டலாமோ? பாராட்டினால், தடியானது தன்னைப் பிடித்தவனை மிரட்டினாற் போலவும், கோலானது நான் மரக்கட்டை அல்லவென்று எழும்பினாற் போலவும் இருக்குமே. (ஏசாயா 10:13–15)

# நாம் கனி கொடாத அத்தி மரங்களா?

''அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார். ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான். அவன் வந்து அதிலே கனியைத் தேடின போது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி **இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்தி மரத்திலேகனியைத் தேடி வருகிறேன். ஒன்றையுங்காணவில்லே இதை வெட்டிப் போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான்இதை சுற்றிலும் கொத்தி, எருப் போடுவேன், கனி கொடுத்தால் சரி, கொடா விட்டால், இனிமேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான் என்றார்.**

*(லூக்கா 13:6-9)*

மற்றவர்களை விட தங்களை மிகவும் நீதிமான்கள் என்றும் எனவே தாங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட தேவையில்லை என்றும் எண்ணிக் கொண்டிருந்த யூதர்களினிமித்தம் இந்த உவமையை நமது இரட்சகர் சொன்னார். விரைவில் அழிக்கப்படப் போகிற கனி கொடாத அத்திமரமாக அவர்களை சித்தரிக்கிறார். இவ்வுவமையின் பாடம் அவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் பொருந்தும். ''நான் ஒரு கனி கொடாத மரமா?'' என்ற கேள்வியை நம்மில் ஒவ்வொருவரும் கேட்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

1) இந்த மரமானது, திராட்சைத் தோட்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல ஒரு இடத்தில் நடப்பட்டிருந்தது. நமது வாழ்விலே உலகப் பூர்வமான ஆசீர்வாதங்கள் அநேகம் நமக்குத் தரப்பட்டுள்ளன. கிறிஸ்து நமக்காக மரித்து, இரட்சிக்கப்பட்டவர்களுக்கு இடமளிக்க தனது சபையை நிறுவி, நம்மை வழி நடத்த வேதாகமத்தை நமக்குத் தந்து தேவனுக்குத் கீழ்ப்படிந்து அவருக்குப் பிரியமாய் நடக்கும் சந்தர்ப்பங்களையும் அளித்து நம்மை ஏராளமாக ஆசீர்வதித்துள்ளார் ஆகவே, மனிதனுக்குக் கிடைத்துள்ள எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனுக்கு ஊழியஞ் செய்ய கிடைத்துள்ள சந்தர்ப்பங்களுக்காகவும் நன்றி சொல்லித் தலைவணங்கி தேவனை ஏற்றுக் கொள்ளாத எந்த ஒரு மனிதனுக்கும் கனி கொடுக்கும் வாய்ப்பில்லை.

2) ஆம் நண்பர்களே, தேவன்தாம் சிறப்புக்கவனத்துடன்படைத்த மனிதனிடமிருந்து கனிகளை எதிர்பார்க்கிறார் மனிதனை பாவத்

திலிருந்து இரட்சிக்கும் நோக்கத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட கிறிஸ்துவை யூத மக்கள் ஏற்றுக் கொள்ள மறுத்ததால் கனி-யற்ற மரங்களாகி விட்டனர் அதே போல நாமும் கிறிஸ்து-வையும், அவருடைய வசனத்தையும் உதறித் தள்ளினால் நாமும் கனி கொடுக்க முடியாதவர்களாகி விடுவோம்.

**''என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச் செடி-யில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனி கொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னை-யல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.** என இயேசு கூறினார். [யோவான் 15: 4, 5] இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்படியாமல் ஒருவன் எத்தகைய நற்கிரியை-களைச் செய்தாலும் தேவனிடத்தில் அவற்றிற்கு எதிர்பார்க்-கிற பலன் கிடைக்காது [அப் 10: 1, 2, 48] முதலில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரவேண்டும். கிறிஸ்துவுக்குள் வர ஒருவன் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்க விருப்பமுள்ளவனாக இருக்கவேண்டும். **''மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்-ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படவேண்டும்.** [ரோமர் 6 : 4] இவை-களை ஒருவன் செய்யும்போது பாவத்தினின்று விடுதலை-யாக்கப்பட்டு, பரிசுத்தமாகி நித்திய ஜீவனை ஒருவன் அடை-கிறான் [ரோமர் 6: 22] தேவனுக்குக் கனிகொடுக்க வேண்டு-மானால் கிறிஸ்துவுக்குள்ளாக வரவேண்டும். நண்பரே! நீங்கள் இதைச் செய்திருக்கிறீர்களா?

3. **இந்த மூன்று வருடங்களாக இந்த மரத்திலே கனி-யைத் தேடி வந்தும் ஒன்றையும் காணவில்லை என தோட்டக்காரனைப் பார்த்து அதன் உரிமையாளன் கூறினான். இதை வெட்டிப் போடு; இது நிலத்தை-யும் ஏன் கெடுக்கிறது!** என்றான் அவன். தேவனுடைய படைப்பில் மனிதன் ஒருவன் மட்டுமே அவருடைய சாயலாக உண்டாக்கப்பட்டான். மனிதனுக்கு மட்டுமே அழிவில்லாத ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் அவனோடு தொடர்பு

வைத்துக்கொள்ள விரும்புகிறார். மனிதன் எப்படி வாழ வேண்டுமென தேவன் விரும்புகிறாரோ, அவற்றை வேதாகமத்தில் மனிதனுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இவைகளையெல்லாம் கவனியாது தேவனுடைய உபதேசங்களுக்கு எப்போது மனிதன் கீழ்ப்படியாமல் அசட்டை செய்கிறானோ அப்போது அவனது வாழ்க்கை கனி கொடாத வீணான ஒரு வாழ்க்கையாகிறது.

இயேசு கிறிஸ்துவின் விலை மதியாத இரத்தத்தால் மனிதனுடைய பாவங்களைக் கழுவி இரட்சிப்பு வழங்க தேவன் பாராட்டின அன்பையும் கரிசனையையும் சிந்தித்துப் பாருங்கள் அடுத்து கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தினால் கழுவப்பட மறுக்கும் மனுமக்களையும் நினைத்துப் பாருங்கள். பழைய ஏற்பாட்டு சாலமோன் ஞானி இவைபற்றி சுருங்கக் கூறியதைக் கவனியுங்கள். **காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.** [பிரசங்கி 12 : 13]

பரிசுத்த ஆவியினால் மட்டுமல்ல, அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் இயேசு என்ற உண்மையை யோவான் கூறுகிறார். பின் கோதுமை (கனி கொடுக்கும் கிறிஸ்தவர்கள்) களஞ்சியத்தில் சேர்க்கப்படும், பதரோ (கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்கள்) அவியாத அக்கினியில் சுட்டெரிக்கப்படும் என்று விளக்குகிறார் [மத் 3 : 12]

4. தேவனுடைய வசனத்தைப் போதித்து, அதற்கு கீழ்ப்படியத் தூண்டும் கிறிஸ்துவின் ஊழியர்கள் தோட்டக்காரனுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். கனி கொடுக்கச் செய்ய மரத்தைச் சுற்றித் தோண்டி, எருப்போடுவது அவர்கள் பணி, நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லி திரு வசனத்தைப் பிரசங்கம் பண்ணுவதை இது குறிப்பிடுகிறது. (2 தீமோ 4:2-3)

தவறான பாதைகளில் தாங்கள் நடந்து கொண்டிருப்பதை அறியாதவர்களையும் பாவப்பழக்கங்களை நேசிப்பவர்களையும் தெளிவாகப் போதிக்கப்படும் வசனங்கள் சுடுகின்றன. பெந்தேகோஸ்தே நாளில் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து, ''சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்கத் தூண்டியது வசனங்களே (அப் 2-37) வல்லமையான நற்செய்தி போதனை மக்களை கலங்கச் செய்தால் அதற்காகக் கவலைப்படாதீர்கள் ஏனெனில் அவர்கள்

மனந்திரும்ப அது தேவையாக இருக்கிறது. மனிதர்கள் தேவனுக்காக கனி கொடுக்க வேண்டி இந்த தூதர்கள் பரிந்து பேசுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். ''நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தி என்னவெனில் எல்லா மனுசருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.'' (1 தீமோ 2:1,3,4) அவர்களின் பரிந்து பேசுதலின் விளைவாக, பாவியானவன் தேவனுக்குக் கீழ்ப்படியும் சந்தர்ப்பங்களுக்கா`காலக்னகெடு பலவேளைகளில் நீட்டிக்கப்படுகிறது.

5. லூக்கா 13:8,9 வசனங்களில் காணப்படும் அத்திமரத்திற்கு மீண்டும் ஒரு வருட அவகாசம் அளிக்கப்பட்டது போல, தேவனுடைய பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. 'கனி கொடுத்தால் சரி; கொடாவிட்டால் இனி இதை வெட்டிப் போடலாம். ஒரு காலம் வரும், அப்போது பாவிக்கு வாழ்க்கை நீட்டிக்கப்படாமல் போகலாம். அப்போது அவனுடைய சிருஷ்டி கர்த்தாவை ஒரு கனி கொடாத மரமாக அவன் சந்திக்க வேண்டி வரும், ஒரு நாள் நமது தேவனாகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார்; அவ்வேளையில் கனி கொடாத மரங்கள் யாவற்றிற்கும் ஐயோ!

பொதுவாக இந்த உவமையானது விசுவாசமற்ற சபை உறுப்பினர்களுக்கு பொருந்துவதாக இருப்பினும், பாவிக்கும் ஒரு நல்ல பாடத்தை இது கற்பிக்கக் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் பாவி தேவன் படைத்த இவ்வுலகில் வாழ்ந்து, அவர் தரும் காற்றை சுவாசித்து, இங்குள்ள சகல ஆசீர்வாதங்களையும் அனுபவித்து வருகிறான். அவனுடைய வாழ்க்கை பிறருடைய இருதயங்களைத் தொட்ட போதிலும், வருத்தப்படக்கூடிய காரியம் என்னவென்றால், கடவுளுக்கு அவன் கனி கொடாதவனாக இருக்கிறான் ஏனெனில், தேவனுக்கு தன்னுடைய வாழ்க்கையை அவன் அர்ப்பணிக்கவில்லை

பாவியாகிய என் நண்பனே! கனி கொடுக்க இன்னும் உனக்கு காலம் இருக்கிறது. மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுவை அண்டிக் கொண்டு கனி கொடுப்பாயா ?

**கொசவபட்டி S.S. ராஜன்.** **கிளிப்போர்டு டிக்ஸன்**

# நான் பிரமிப்பு அடைகிறேன்

மக்களுடைய மனநிலைகளைப் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. ஒரு சில விஷயங்களில் மிகவும் புத்திசாலித் தனமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்கள். வேறு சில விஷயங்களில் மிகவும் அறிவீனமாகவும் மெத்தனமாகவும் நடந்து கொள்கிறார்கள். உலகப் படைப்பு, மற்றும் அண்ட சர்ாசரங்கள், மனிதர்கள், மிருகங்கள் ஆகிய படைப்புகளையே எடுத்துக் கொள்ளுங்கள், பரிசுத்த வேதாகமம், ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார் என்று தொடங்கி படைப்பின் வரலாற்றைத் தெளிவாகக் கூறுகிறது. [ஆதி 1] ஆனால் அதை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு மாந்தருக்குள் புகுந்து கொண்டு அவனை ஆட்டிப் படைக்கிற பெருமை இடம் தருவதில்லை. ஆகவே அவன் தன் கற்பனைக்கு என்னென்ன தோன்றுகிறதோ அவைகளையெல்லாம் பிதற்றுகிறான் அந்தப் பேத்தலை நியாயப்படுத்துவதற்கு அரும்பாடு பட்டு ஏதேதோ விளக்கங்களைக் கொடுக்கிறான்; ஆனால் அவைகள் ஒரு போதும் உண்மையோடு ஒத்துப் போவதில்லை. இருந்தாலும் பிடிவாதமாக அதற்கு வேறு ஏதாவது சப்பைக் கட்டு கட்ட முயல்கிறான். சுமார் கோடி ஆண்டுகளுக்கு முன்பு திடீரென்று இடி முழக்கம் போன்ற ஒரு சத்தம் உண்டாகி, நாம் காண்கிற அனைத்து காரியங்களும், உயிரினங்களும் உண்டாயின என்று தான் நம்புவதாகவும், அதை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரயத்தனப்படுகிறான். மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்பான் இன்னொருவன். ஆனால் இன்று வரை அதுவும் நிரூபிக்கப் பட முடியாத கற்பனை என்று சாராசரி அறிவு படைத்தவனுக்கு கூட விளங்குகிறது. ஆனால் அந்தக் கூற்றை நம்புவதற்கு அறிஞர் குழாம் ஒன்று உண்டு.

இதற்கெல்லாம் அடிப்படை என்ன என்று கவனிக்கும்போது "கடவுள் இல்லை; அது மனிதனுடைய கற்பனை" என்பது தான். **தேவன் இல்லையென்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்** என்று தாவீது அரசன் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுக் கடிந்து கொள்கிறான். (சங் 14:1) எடுத்துக் காட்டாக சூரியனை எடுத்துக் கொள்வோம். சூரியனே இல்லை என்று வைத்துக் கொள்வோம். அல்லது இப்பொழுது உள்ள தூரத்தை விட இன்னும் வெகு அருகாமையிலோ அல்லது இப்பொழுது இருக்கிற தூரத்தை விட இன்னும் தொலைவிலோ இருக்கிறதாக வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? நாம் உருகிப் போவோம் அல்லது உறைந்து போவோம்.

அது அந்தரத்தில் எந்த ஆதாரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது? அது எவ்வாறு இயங்குகிறது? எப்பொழுதாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? நிச்சயமாக ஒரு மாபெரும் சக்தி தான் அதனை அங்கே வைத்திருக்க வேண்டும். அதை ஒழுங்காக காலா காலமாக இயக்கிக் கொண்டும் இருக்கிறது. அது எதுவாக இருக்கும்? வியப்பாக இருக்கிறதல்லவா? அந்த சக்தியைத் தான் வேதாகமம் தேவன் என்று நமக்கு அடையாளம் காட்டுகிறது.

இதைக் குறித்து வெகு காலத்துக்கு முன்னதாக ''கர்த்தரைத் துதியுங்கள். அவர் நல்லவர் அவர் கிருபை என்றும் உள்ளது.

தேவாதி தேவனைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளது.

கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.

தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.

பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.

பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

இரவில் ஆளச் சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது என்று பாடியுள்ளார் (சங். 136:1-9)

நீங்கள் எப்பொழுதாவது தாவர உலகத்தை உற்றுக் கவனித்திருக்கிறீர்களா? எத்தனை அழகிய வண்ணப் பூக்கள்! எத்தனை விதமான மரம், செடி, கொடிகள்! அவைகள் சிறு விதைகள் மூலமாக உற்பத்தியாகி அந்தந்தப் பருவத்தில் தங்களுக்கேற்ற மேனியைப் பெற்று வளர்ந்து பெரிதாகின்றன, இத்தனை அதிசயத்தை சிறு மாத்திரைகள் போன்ற வில்லைக்குள் எப்படி, யார் அடக்கி வைத்தவர்கள்!? இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கிற எவரும் வியப்படையாமல் இருக்கமுடியாது. மிகப்புகழ் வாய்ந்தவரும், ஆடம்பரப் பிரியருமான சாலமோன் முதலாய் தன் சர்வ வல்லமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று இயேசுவே சாட்சி பகருகிறார். (மத் 6:29)

இன்னும் பிறப்புகளை எடுத்துக்கொள்வோம். குறிப்பாக மனிதப் பிறப்பைப் பாருங்கள் நம்பமுடியாத அளவுக்கு அது ஆச்சரிய மான செயலாக இருக்கிறது அதை ஒரு அற்புதம் என்றாலும் மிகை யாகாது ஆனாலும் அன்றாடம் ஆயிரமாயிரம்உயிர்கள் சர்வசாதா ரணமாகப் பிறக்கின்றன. இன்னும் எத்தனை எத்தனையோ! நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அண்டசராசரங்கள் மர்ம மானதாகவும், ஆச்சரியமானதாகவும், பிரமிப்பூட்டுவதாகவும், விளங்கிக் கொள்ள முடியாததுமாயிருக்கிறது. ஆனால் அவைகள் காலா காலமாக இருப்பதாலும், தங்கு தடையின்றி இயங்கிக் கொண்டிருப்பதாலும் நாம் அவைகளைக்கண்டு கொள்வதில்லை. கவ துப் பார்ப்போமானால் மானிடராகிய நாம் எவ்வளவு அற்ப அறிவு ஜீவிகள் என்றும், நாம் பெரிதாய்ப் பெருமைப்பட்டுக் கொள்கிற விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாம் தேவனுடைய அற்புதமான படைப்புகளோடு ஒப்பு நோக்கும்போது எவ்வளவு அற்பமானவை கள் என்றும் வெட்கப்பட்டு, நம்மைத் தாழ்த்தி, இவைகளை யெல்லாம் யடைத்துப்பராமரித்து வருகிற சர்வ வல்லமையுள்ள வரைப் போற்றி வணங்கத் தவறமாட்டோம். என்னைப் பொறுத்த வரையில் தேவனுடைய சர்வவல்லமையையும், அவருடைய படைப் புகளையும், அவைகள் பராமரிக்கப்படும் பாங்கைப்பற்றியும்நினைத் துப் பார்க்கும்போது பிரமிப்படைகிறேன். தேவன் மனுக்குலத்துக்கு மாத்திரமே சிறப்பாகக் கொடுத்திருக்கும் அறிவைக் கொண்டு சிந்தித்துப் பார்க்கிற எவருக்கும் அவ்விதமான உணர்வுகளே ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆம், நண்பர்களே, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கவனித்துப் பார்த்தால் கர்த்த ருடைய கரம் அவைகளோடிருப்பதை நாம் அறிய முடியும், அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். அவர் நமக்குப் பாதுகாப்பு அளிக்கிறார். வாழ்க்கையில் பல நல்ல வாய்ப்புகளை அருளுகிறார், அவர் மன்னி- கிறார் இன்னும் பலவகையில் நமக்கு மறைமுகமாக ஒத்தாசை செய்கிறார். ஆனாலும் அவைகளையெல்லாம் நாம் எண்ணிப்பார்ப் பதில்லை. எல்லாருக்கும் நடக்கிறது தானே, நமக்கு மட்டும் என்ன ஸ்பெஷலா நடக்கிறது? எல்லாம் அவரவருடைய அதிர்ஷ்டம் என்று வேறு சப்பைக் கட்டுக்கட்டுகிறோம். அல்லது சும்மாவா? அதற்காக நான் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டேன் தெரியுமா? என்று நம்முடைய சாமர்த்தியத்தைப் பற்றிப் பெருமை பேசுகிறோம்.

இல்லை, நண்பர்களே! அது கர்த்தருடைய சுத்தக் கிருபை அது நம்முடைய சாமர்த்தியமுமல்ல, நம்முடைய அதிர்ஷ்டமும் அல்ல (சங் 127:1-3) குறிப்பாகக் கர்த்தருடைய பிள்ளைகள்

விஷயத்தில் நம்முடைய ஒவ்வொரு அசைவும் அவருடைய வழி நடத்துதலே, அதைக் குறித்துப் பவுல் **''அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்''** என்கிறார் (ரோமர் 8;28)

தேவனையும் அவருடைய மகத்துவங்களையும், படைப்பு களையும் நினைத்து நினைத்து நான் பிரமிப்படைவதைப் போலவே இத்தகைய வியப்பூட்டும் காரியங்களையும் பார்த்தும் கேட்டும் கூட சிந்தனையில்லாமல் தங்கள் மனம் போல வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்தாமலும் தங்கள் சிந்தையில் வீணராயிருக்கிற மனிதர் களைப் பார்த்தாலும் 'இப்படியும் மனிதர்களா'? என்று பிரமிப்பு உண்டாகிறது நண்பரே நீங்கள் அந்தப்பட்டியலில் இருக்கிறீர்களா? நீங்கள் உங்களையும் வாழ்க்கையையும் மரணத்துக்குப்பிறகு நீங்கள் உங்கள் நித்தியத்தை எங்கே கழிப்பீர்கள் என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள், இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தேவன் நமக்கு ஆலோசனைகளும், அறிவுரைகளும் அடங்கிய தமது புத்தகத்தில் விடை பகர்ந்திருக்கிறார். அவைகளையெல்லாம்படித்துத்தியானியுங் கள் அப்பொழுது நீங்களும்கூட கர்த்தரையும் அவருடைய படைப்பு களையும் வியந்து பிரமிப்பு அடைவீர்கள் தேவன்தாமே உங்களுக்கு அவ்விதமான உணர்வை ஏற்படுத்தி வாழ்க்கையைப் பற்றியும் இரட் சிப்பைப்பற்றியும் அறிந்துகொள்ள ஆர்வத்தையும் சூழ்நிலையையும் அருள்வாராக!

**J. C, சோட்**

நீதிமான் யார்? அவனுடைய ஆசிர்வாதங்கள் என்ன?

**நீதியாய் நடந்து செம்மையானவைகளைப் பேசி இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்துத் தன் கைகளை உதறி, இரத்தம் சிந்துவதற் கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து பொல்லாங்கைக் காணாதபடிக் குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ**

**அவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணு வான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும். அவன் அப்பம் அவனுக் குக் கொடுக்கப்படும்: அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்**

**ஏசாயா 33:15,1**

# நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாக இருந்தால் . . .

சமீபத்தில் டெல்லிக்கு வந்த சிலர் கிறிஸ்துவின் சபையார் நடத்தின ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஆராதனை முடிந்த பிறகு அந்தக் குழுவைச் சேர்ந்த ஒரு பெண்மணி ''அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவாய் அன்பு பாராட்டிக் கொள்கிறார்கள்'' என்று வியந்து பாராட்டினாள். அந்த அம்மாள் சொன்ன பிறகு நான் கூட அதைக் கவனித்தேன்.

உண்மையாகவே, அந்த ஆராதனையில் கலந்து கொண்ட மக்களுக்குள் ஒரு நெருக்கம் காணப்பட்டது. ஒருவரையொருவர் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டனர். உற்சாகமான உரையாடல்கள், புன்முறுவல் மகிழ்ச்சி, அவர்கள் முகங்களில் காணப்பட்டன. ஆராதனைக்கு வந்தவர்களில் ஒரு கண் தெரியாத பெரியவர் இருந்தார். ஏறக்குறைய எல்லா அங்கத்தினர்களுமே அவரிடம் சென்று நலம் விசாரித்தனர். வந்திருந்த அந்தக் குழுவினர், ஏழ்மையும், ஆதரவற்ற நிலையிலும் இருக்கிற அந்த முதியவரை மற்ற விசுவாசிகள் எவ்வளவாய் நேசிக்கிறார்கள். இதல்லவோ கிறிஸ்தவம் என்று வியந்து மெச்சினர். ஆராதனை முடிந்து ஏறக்குறைய ஒரு மணி நேரம் இருக்கும். பெற்றோர்கள் தங்களுக்குள் பல விஷயங்களை மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். பிள்ளைகள் உற்சாகமாக அங்கேயும் இங்கேயும் ஓடிக் கொண்டும், விளையாடிக் கொண்டும் திரிந்தனர். வசதியும் உற்சாகமுமுள்ள சில குடும்பத்தார் பக்கத்திலுள்ள உணவகங்களிலிருந்து சில உணவுப் பண்டங்களை வரவழைத்து மற்றவர்களோடு பகிர்ந்துண்டு மகிழ்ந்தனர். மெய்யாகவே அங்கே அன்பு பிரசன்னமாயிருந்ததைக் காண முடிந்தது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. **''நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.''**

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள்**

என்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள்'' (யோவான் 13:34,35)

இந்த உலகத்து மக்களுக்குக் கிடைக்காத ஒரு பொக்கிஷம் கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களுடைய உறவின் ஊற்றுக்கண் பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனிடத்தில் இருந்து சுரக்கிறது. நமது மூத்த சகோதரராகிய இயேசு தம்மை பின்பற்றுகிற மக்களுக்கு நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்ற புதிய கட்டளையைக் கொடுத்திருக்கிறார்.

உலக மக்கள் கூட கணவன் மனைவிக்குள்ளே அன்பாயிருக்கிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகள் கூட பாசத்துடன் நடந்து கொள்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவம் அப்படியல்ல. இயேசு உலகளாவிய தன் குடும்பத்தில் பலதரப்பட்ட மக்கள் கூட்டத்தை ஒருமைப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஒருவரையொருவர் நேசிக்கும்படி செய்திருக்கிறார், ஏழை என்றும், செல்வந்தன் என்ற வித்தியாசமோ, இளைஞர் முதியவர் என்ற பாகுபாடோ, படித்தவர்கள் பாமரர்கள் என்ற வேறுபாடோ பலவான்கள் இளைத்தவர்கள் என்ற மனப்பான்மையோ ஆண்கள் பெண்கள் என்ற உயர்வு தாழ்வோ இன்றி எந்நாட்டவராயிருந்தாலும் எம்மொழி பேசுபவர்களாக இருந்தாலும், உலக சம்பத்தைப் பொறுத்த வரையில் 'அன்றாடங்காய்ச்சிகள்' என்ற நிலை இருந்தாலும் கிறிஸ்தவ அறத்துக்குள் வந்து விட்டால் போதும் வித்தியாசங்களை மறந்து ஒருவரோடொருவர் சகோதர அன்புடன் பழகிக் கொள்கிறார்கள் இது எப்படி சாத்தியமானது? அவர்கள் காட்டும் குடும்பப் பாச உணர்வு உண்மையானதா? அது இருதயத்தின் ஆழத்திலிருந்து வரும் அன்பு தானா? என்று சிலர் சந்தேகிக்கக் கூடும். அப்படி சந்தேகிக்கக் கூடாது.

கிறிஸ்துவின் சபை உதயமான முதல் நூற்றாண்டில் கலாத்திய நாட்டிலும் ஒரு சபை நிறுவப்பட்டது. அதற்கு பவுல் அப்போஸ்தலன் ஒரு நிருபம் எழுதுகிறார் அதில் ''யூதரென்றும் கிரேக்கரென்றும் இல்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை, ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'' என்கிறார் (கலா 3:28) மக்கள் மத்தியில் சாதாரணமாகக் காணப்படுகிற மூன்று பெரும் வித்தியாசங்களைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறார். 'யூதனென்றும் கிரேக்கனென்றும்' என்று சொல்லும் போது இனம் அல்லது குறிப்பிட்ட ஒரு நாட்டையும், அவர்களுடைய சமய நம்பிக்கையையும் குறிக்கிறது. 'அடிமையென்றும் சுயாதீனன் என்றும் இல்லை' என்று சொல்லும்போது பொருளாதாரம் மற்றும் அவர்களுடைய

சமூக அந்தஸ்தைக் குறிக்கிறது. 'ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை' என்று சொல்லும் போது மனித சமுதாயத்தின் இரு கூறுகளான ஆண் பெண்பாலருடைய உடல்வாகு மற்றும் உணர்வுகள் ஆகியவைகளில் சில மாற்றங்கள் இருக்கலாம்; மற்றபடி சமமே என்பதையும் குறிக்கிறது

இப்படிப்பட்ட வேறுபாடுகள் தானே உலகத்தில் ஏற்படும் பலவிதமான பிரச்னைகளுக்கு மூல காரணங்களாக இருக்கின்றன. மத நம்பிக்கையில் உள்ள வேறுபாடுகள் தானே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே தீராத பகைமை உணர்வுக்குக் காரணம், அயோத்தியில் ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலைக்கும் தவறான மத உணர்வே காரணம். இன்னும் எங்கெல்லாம் சண்டையும், பூசலும் நிலவுகிறதோ அங்கெல்லாம் இவைகளில் ஏதாவதுதான் காரணம். செத்து மடிந்தாலும் மடிவோமே தவிர சமாதானமாய் ஒற்றுமையாய் இருக்க மாட்டோம் என்று பிடிவாதம் பிடிப்பதற்கு வேற்றுமை உணர்வுகளே காரணம்.

ஆரம்ப நாட்களிலிருந்து மனிதகுல வரலாற்றை அலசிப் பார்த்தால் இந்த வருந்தத்தக்க உண்மை புலனாகும். இந்த நிலைமை மாறுவதற்கு வழியே இல்லையா? இது நிரந்தரமானதுதானா என்ற ஏக்கம் நல்ல உள்ளம் படைத்த அனைவரையும் வாட்டுகிறது.

கிறிஸ்தவ அறத்தை உண்மையாய்ப் பின்பற்றுபவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்படிப்பட்ட பின்னணியில் இருந்து வந்தவராயினும் இத்தகைய வித்தியாசங்களைப் பாராட்டுவதில்லை ஒரு பிராந்திய சபையில் அமெரிக்கர்கள் இருப்பார்கள் பல்வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்த இந்தியர்கள் இருப்பார்கள். கனடாவைச் சேர்ந்தவர்கள்; ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள் சீனர்கள் இருப்பார்கள் முன்னாள் முகமதியர், புத்தர்கள், ஹிந்துக்கள் மற்றும் பிரிவுச்சபைகளைச் சேர்ந்தவர்களும் கூட உண்டு. இந்த மக்கள் எத்தனை வகையில் வித்தியாசப்பட்டவர்கள் உணவு உடை நிறம், மொழி, பண்பாடு என்று எத்தனையோ உண்டு. ஆனாலும் அவர்களை ஒன்றுபடுத்துவது எது? அவர்கள் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்துக்குள் திருமுழுக்குப் பெற்று தேவனுடைய குடும்பத்தில் அங்கமாகி விட்டோம் என்ற ஒரே உணர்வுதான்.

ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள் என்று இயேசுகிறிஸ்து அறிவுரை கூறியிருந்த போதிலும், அவர்களுக்குள் ஒருகாலத்தில் வித்தியாசங்கள் காணப்பட்டது உண்மை, ஆனால் ஒன்றாகக் கூடித் தொழுது ஒன்றாக வேத வசனங்களைப் படித்து தியா-

னித்து தங்கள் அன்பை வளர்த்துக்கொண்டு வித்தியாசத்தை குறைத்துக் கொண்டார்கள். இது ஏன், எப்படி நிகழ்ந்தது? **''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல நீங்கள் என்னை பின் பற்றுங்கள்**, என்று 1கொரி11:1ல் சொல்லப்பட்டிருக்கிறது. 2 கொரி 3: 18ல் **''நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்** என்று வாசிக்கிறோம். இப்படி தேவனால் அருளப்பட்ட வேத வாக்கியங்களை படித்து தியானித்து அவரைப் போலவே சிந்திக்கவும் அவரைப் போலவே நடந்து கொள்ளவும் பிரயாசப்படுகிறோம் அன்றாட வாழ்க்கையில் அதை நடைமுறைப் படுத்த முயல்கிறோம்.

அவர்கள் பின்னணி பலவகையில் வித்தியாசமாக இருந்த போதிலும் அவர்கள் கிறிஸ்துவின் போதனைகளைக் கைக்கொள்ளப் பழகி வித்தியாசத்தை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் தாங்கள் கர்த்தருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற உணர்வை வளர்த்துக் கொண்டு ஒருவரையொருவர் நேசிக்கப் பழகிக் கொள்கிறார்கள்.

மேலும் இவ்வாறு தேர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் வெவ்வேறு நாடு, நகர்களுக்குச் சென்று அங்குள்ள கிறிஸ்தவர்களைச் சந்திக்கும்போது ரொம்பக் காலம் பழகினவர்களைப் போல் சீக்கிரத்தில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், அன்பு பாராட்டவும் தொடங்கி விடுகிறார்கள். அது எப்படி சாத்தியமாகிறது என்று சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் ஒரே விதமான போதனைகளைப் பெற்று ஒரே புத்தகத்தை வாசித்து அதன் அடிப்படையில் தங்கள் வாழ்க்கை நெறிகளை அமைத்துக் கொண்டு கர்த்தருடைய குடும்பத்தின் பண்பாடுகளைப் புரிந்து கொள்கிறார்கள்.

தேவனுடைய திட்டம் என்னவெனில்: சரீரமாகிய சபைக்குள் வேறுபாடுகள் இருக்கக்கூடாது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒரு அங்கத்தினருக்கு ஒரு பிரச்னை என்றால் அது மற்ற அங்கத்தினர்களையும் பாதிக்கிறதாக உணரவேண்டும் அல்லது ஒரு அங்கத்தினருக்கு ஒரு உயர்வு அல்லது மரியாதை கிடைக்கிறது என்றால் அது அனைவருக்கும் கிடைத்ததாகப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய குடும்பமாகிய சபையில் ஒருமைப்பாட்டை வளர்க்கும் பணியில் பெண்களுக்கு முக்கிய பங்கு உண்டு. மற்ற

வர்களுடைய பிரச்னையின் தன்மையைப் புரிந்து கொள்வதற்குரிய விசேஷித்த ஞானத்தைத் தாய்க்குலத்துக்கு கொடுத்திருக்கிறார்.

பெண்ணினத்துக்கு இயற்கையாகவே அன்பும் மன உருக்கமும் உண்டு. ஆண் வர்க்கத்தைவிடத் தாய்க்குலத்துக்கு அன்பு காட்டவும், ஒருவர் கஷ்டப்படும்போது ஆதரிக்க வேண்டும் என்ற பரிவும் உண்டு. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் குடும்பத்தாரோடும், மற்ற கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளிடத்தும் தேவனுடைய தூய அன்பைப் பிரதிபலிக்க வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் கிறிஸ்துவின் அன்பு எவ்வளவு உயர்ந்தது என்பதை உலகத்தாருக்குக் காட்டுகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகவே நாம் வார்த்தையினாலும், செய்கையினாலும் அன்பு கூறக் கற்றுக் கொள்ளுவோம்.'' அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று அறிந்து கொள்வார்கள்'' என்று இயேசு சொல்லிய வசனத்தை நிறைவேற்றுவோம்.

**பெட்டி பார்ட்டன் சோட்**

---

### நீதிமான் பாதை வெளிச்சம்; துன்மார்க்கன் பாதையோ இருள்

**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போல இருக்கும்.**

**துன்மார்க்கருடைய பாதையோ காரிருள் போல் இருக்கும். தாங்கள் இடறுகிறது இன்னதில் என்று அறியார்கள் (நீதி 4:18, 19)**

---

### எல்லா பிரலனைக்கும் மனிதனே காரணம்; கடவுள் அல்ல

**இதோ தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டனர்.**

**பிர 7:29**

# திருமணம்

பின்பு கடவுளாகிய கர்த்தர், **''மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல. அவனுக்கு உதவி செய்யத் தகுந்த துணையை அவனுக்கு, உண்டாக்குவேன்''** என்று கூறினார்.

பின்பு கடவுளாகிய கர்த்தர் மனிதனுக்கு அயர்ந்த நித்திரை வரச் செய்தார். அவன் நித்திரை செய்யும்போது அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சதையால் மூடினார். அந்த எலும்பினால் ஒரு பெண்ணை உருவாக்கி அவளை அவனிடம் கொண்டு வந்தார். மனிதன் அவளை பார்த்து,

**''இவள் என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமுமாயிருக்கிறாள். இவள் மனிதனிலிருந்து உருவாக்கப் பட்டபடியால் 'மனுஷி' எனப்படுவாள்** என்றான்.

**இருவர் ஒன்றாக இணைதல் :**

இயேசு மறுமொழியாக ''ஆதியிலே கர்த்தர் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்'' என்று நீங்கள் வேதத்தில் வாசித்ததில்லையா? கடவுளும், ''இதன் காரணமாக மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒன்றாயிருப்பார்கள்'' என்று கூறினார். எனவே அவர்கள் இருவரல்ல; ஒருவரே. கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்றார்.

மத்தேயு 19:4-6

**திருமணத்தின் பொறுப்புகள்:**

ஒரு மனிதன் திருமணம் செய்வது நல்லது. ஏனெனில் பால் இச்சை எல்லாரிடமும் இயற்கையாகக் காணப்படுவதால் ஒவ்வொரு மனிதனுக்கும் மனைவி இருக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் கணவன் இருக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் மனைவிக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு மனிதனும் தன் கணவனுக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டும். மனைவிக்கு தன் சரீரத்தின் மேல் அதிகாரமில்லை. கணவனே அதற்கு அதிகாரி. அதே போல் கணவனும் தன் உடலுக்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. தியானத்திற்குத் தடையிராதபடி இருவரும் சம்மதித்து சிறிது காலம் பிரிந்திருக்கலாம். உங்களுக்கு புலனடக்கம் இல்லாதபடியால் மறுபடி ஒன்று கூடி திருமணத்திற்கான கடமைகளை நிறைவேற்றலாம். சாத்தான்

உங்களைச் சோதிக்காதபடி இது உங்களைக் காக்கும். திருமண மானவர்களுக்கு நானல்ல கர்த்தரே கொடுக்கும் கட்டளையாவது "மனைவி கணவனைப் பிரிந்து போகக்கூடாது. பிரிந்து சென்றால் அவள் விவாகமில்லாமல் இருக்கவேண்டும். அல்லது கணவனோடு ஒப்புரவாக வேண்டும். கணவனும் தன்மனைவியை தள்ளி விடக்கூடாது. 1 கொரி 7:1-5, 10-11

## கீழ்ப்படிதல், மரியாதை, அன்பு

கிறிஸ்துவில் நீங்கள் வைத்திருக்கும் நன்மதிப்பினாலே ஒருவருக்கொருவர் அன்புடன் இருங்கள்.

கர்த்தருக்கு அடங்கியிருப்பதுபோல மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்கு அடங்கியிருக்க வேண்டும். கிறிஸ்து திருச் சபைக்கு அதிகாரியாய் இருப்பதுபோல கணவனும் மனைவிக்கு அதிகாரியாய் இருக்கிறான். அவரே தமது உடலாகிய திருச்சபையின் மீட்பர். சபையானது கிறிஸ்துவுக்கு அடங்கியிருப்பது போல மனைவிமார்களும் எல்லாக் காரியத்திலும் கணவன்மார்களுக்கு அடங்கியிருக்க வேண்டும்.

கிறிஸ்து திருச்சபையை நேசித்து அதற்காகத் தம் உயிரைக் கொடுத்ததுபோல கணவன்மார்களும் தங்கள் மனைவிகளை நேசிக்கவேண்டும். கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து அது பரிசுத்தமும் மாசற்றதுமாயிருக்கும்படி அதைத் திருவசனத்தோடு கூடிய தண்ணீர் முழுக்கினால் தூய்மைப்படுத்தி, கறை திரை ஒன்றுமில்லாமல் மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும், அதற்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார். அப்படியே கணவன்மார்களும் தங்கள் உடலில் அன்புகூருகிறது போலத் தங்கள் மனைவிகளிடம் அன்புகூர வேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில் தானே அன்புகூறுகிறான் தன் சொந்த உடலை ஒருவனும் ஒருக்காலும் பகைத்ததில்லையே கிறிஸ்து திருச்சபையைப் பாதுகாப்பது போல ஒவ்வொருவனும் தன் மனைவியை காப்பாற்றுகிறான். ',இதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு பிரிந்து தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்திருப்பார்கள். இந்த இரகசியம் பெரிது. கிறிஸ்துவையும் திருச்சபையையும் குறித்தே நான் இவ்வாறு கூறுகிறேன். ஒவ்வொருவனும் தன்னில் அன்பு கூறுகிறது போலத் தன் மனைவியிடம் அன்புகூரக்கடவன். மனைவியிடம் பயபக்தியாய் இருக்கவேண்டும்.
எபேசியர் 5: 21- 23

## கணவன் மனைவியை எவ்வாறு நடத்துவது?

இப்படியே புருஷர்களே உங்கள் மனைவிகள் பெலவீனமா

னவர்கள் என்றறிந்து விவேகத்தோடு அவர்களோடு வாழுங்கள் கர்த்தரின் கிருபையை உங்களோடு கூட அவர்களும் பெற்றுக் கொள்வார்களானபடியால் அவர்களை மதித்து நடத்துங்கள் உங்கள் ஜெபத்திற்கு ஒன்றும் தடையிராதபடி இப்படிச் செய்யுங்கள்.

1 பேதுரு 3:7

**மனைவி கணவரை மகிழ்விப்பது எப்படி?**

அப்படியே மனைவிகளே நீங்கள் உங்கள் கணவன்மார்களுக்கு அடங்கியிருங்கள். அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் உங்கள் நன்னடத்தையினாலே நம்பிக்கைக்குட்படுவார்கள். நீங்கள் அவர்களோடு பேச வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் உங்கள் நடத்தை பயபக்தியுள்ளதும், கற்புள்ளதுமாயிருக்கிறதே. நீங்கள் சடை பின்னுதல், பொன்னாபரணங்களைத் தரித்தல், விலையுயர்ந்த ஆடை உடுத்துதல் போன்றவற்றால் உங்களை அழகுபடுத்திக் கொள்ளாமல் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியை உங்கள் இருதயம் தரித்துக் கொள்ளக் கடவது. அதுவே கடவுளின் பார்வையில் மேலானது. அந்தப்படியே முற்காலத்தில் பக்தியுள்ள பெண்கள் கர்த்தரிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்திருந்ததோடு, தங்கள் கணவன் மார்களுக்கு அடங்கி நடந்தவர்களாய்த் தங்களை அலங்கரித்தார்கள். சாராள் அப்படியே நடந்து கொண்டாள். தன் கணவனாகிய ஆபிரகாமைத் தன் 'எஜமான்' என்று அழைத்தாள். நீங்கள் நன்மை செய்து எந்த ஆபத்துக்கும் பயப்படாதிருந்தால் அவருக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். 1 பேதுரு 3:1 - 6

**குழந்தைகளுக்கு ஆன்மீகப் பயிற்சி :**

இஸ்ரவேலே! கேள். ''உன் தேவனாகிய கர்த்தரே நம் கடவுள். கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்மாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவாயாக. நான் இன்று உனக்குக் கொடுக்கும் கட்டளைகளை நீ மறவாதே. அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடு. நீ வீட்டில் இருக்கும் போதும் வெளியில் இருக்கும்போதும், படுத்திருக்கும்போதும் எழுந்திருக்கும் போதும் அவைகளைப் பற்றிப் பேச வேண்டும். உபாகமம் 6:4-7.

''நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு. முதிர் வயதிலும் அவன் அதை விடாதிருப்பான்''. நீதிமொழிகள் 22:6.

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட, ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வ நாயகம், 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

To
Mr. J.C. Choate
Post Box 3815
NEW DELHI
110049



If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.